# 16 பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக

கிரான் தனது கல்விச் செயற்பாடுகளை இடைநடுவே நிறுத்திக் கொண்ட இருபது வயது இளைஞன். தனது பாடசாலை நாட்களில் பல்வேறுபட்ட துர்நடத்தைகளுக்கு அடிமையாகி இருந்தமையால் பணத் தேவை அவனுக்கு அதிகமாக ஏற்பட்டது. அதற்காக அவன் எதையுமே செய்யத் தயாராக இருந்தான்.

சிறுநீரக நோயாளர்கள் மற்றும் பலதரப்பட்ட நோய்களால் துன்புறு வோரை தூர இடங்களுக்கு வாகனங்களில் ஏற்றிச் சென்று அவர்களைக் காட்டி பணம் சம்பாதித்தான். சில நாட்களில் நோயாளர்கள் இல்லாத போதும் அவர்களின் வைத்தியப் பரிசோதனை அட்டைகளைக் நாட்கூலிக்கு எடுத்து பணம் தேட கிராமங்களுக்கு எடுத்துச் சென்றான். சில காலமாக இவ்வாறு பொய் சொல்லி, ஏமாற்றி, பணம் பறித்து வாழ்க்கையை நடாத்தி வந்தான். கிரானின் இந்தக் கபடச் செயலால் ஒரு நாள் பொலிசா ரிடம் மாட்டிக் கொண்டான். மற்றவர்களை ஏமாற்றுவதில் கில்லாடியாக இருந்த கிரானால் பொலிசாரை ஏமாற்ற முடியவில்லை. (2014.12.21 லங்காதீப எனும் சிங்களப் பத்திரிகையில் இருந்து எடுக்கப் பட்ட உண்மைச் சம்பவம்.)

''வாய்மையே வெல்லும், உண்மையே உயர்வடையும், உயிர் போனாலும் உண்மை பேச வேண்டும்'' போன்ற கூற்றுக்கள் உண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. அது மட்டுமல்ல உண்மையாக வாழ்பவர்களை சமூகம் மதிக்கின்றது. ஏமாற்றி வாழ்பவர்களை சமூகம் வெறுக்கின்றது. பத்துக் கட்டளைகளில் எட்டாம் கட்டளை உண்மை பேசுவதையும் உண்மையாக வாழ்வதையும் பற்றிக் கற்பிக்கின்றது. அத்து டன் திருமுழுக்கு அழைப்பின் மூலம், இறைபிள்ளைகளாக ''உண்மை'' இறைவனைப் பின்பற்றவும் உண்மைக்கு மதிப்பளித்து வாழவும் அழைக்கப்படுகின்றோம்.

திருவிவிலியத்திற்கேற்ப பொய் சொல்லுதல் மிகப் பெரும் பாவமாகும். ஆகவேதான் திருச்சபைக்குப் பொய் சான்று கூறிய அனனியாஸ் மற்றும் சபீரா ஆகியோர் உடனடியாக மரணித்தனர். (தி. பணி 5: 1-11) எனவே எட்டாம் கட்டளை பொய் பேசுவதை பாவம் என்கின்றது.

பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே
(வி. பயணம் 20:16)

பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே
(இ.சட்டம் 5:20)

இதனூடாக அயலவருக்கு எதிராகப் பொய்ச்சான்று உரைக்கக் கூடாது என்பது கூறப்படுகின்றது. அத்தோடு இறைவனுக்கு நாம் கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

இயேசு கிறிஸ்துவின் கற்பித்தலின்படி பொய் பேசுதல் மனிதன் வீணாய்ப் போவதற்குக் காரணமாக அமைகின்றது.

இயேசு மக்கள் கூட்டத்தைத் தம்மிடம் அழைத்து அவர்களை நோக்கி, நான் சொல்வதைக் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வாய்க்குள் செல்வது மனிதரைத் தீட்டுப்படுத்தாது, மாறாக வாயிலிருந்து வெளிவருவதே மனிதரைத் தீட்டுப்படுத்தும் என்றார். ஏனெனில் கொலை, விபச்சாரம், பரத்தன்மை, களவு, பொய்ச் சான்று, பழிப்புரை ஆகிய தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன. இவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன.
(மத் 15: 10-20)

மேற்கூறப்பட்ட திருவிவிலியப் பகுதி பொய்ச்சான்று கூறத் தூண்டும் எண்ணங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. பொய்ச் சான்று கூறத் தூண்டுவது ‘‘சாத்தான்’’ என்று கூறப்படுகின்ற தீய சக்தி என்பது கீழ்க் காணப்படும் பகுதியால் தெளிவாகின்றது.


இலவச விநியோகத்திற்காக

சாத்தானே உங்களுக்குத் தந்தை. உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம். தொடக்க முதல் அவன் ஒரு கொலையாளி. அவனிடம் உண்மை இல்லாததால் அவன் உண்மையை சார்ந்து நிற்கவில்லை. அவன் பொய் பேசும்போதும் அது அவனுக்கு இயல்பாக இருக்கின்றது. ஏனெனில் அவன் பொய்யன். பொய்மையின் பிறப்பிடம்.

(யோவா 8 : 44)

மேலும் தூய பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் பொய் பேசுவதை விட்டுவிட்டு உண்மை பேச வேண்டும் என்பதனைக் குறிப்பிடுகின்றார்.

பொய்யை விலக்கி ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள். ஏனெனில் நாம் யாவரும் ஒருடலில் உறுப்புகளாய் இருக்கிறோம்.

(எபே 4:25)

கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக் கல்விக்கு ஏற்ப, அயலவர்களுடனான எமது உறவில், உண்மையைத் திரிபுபடுத்துவது எட்டாவது கட்டளைக்கு எதிரான பாவம் என்று குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் முழு முதலும், உண்மையுமான இறைவனுக்கு சாட்சியாக வாழச் சொல்லிலும் செயலிலும் உண்மை இருக்க வேண்டும். அது மனசாட்சியின்படி நேர்மையாக வாழ உதவும்.

ஒவ்வொருவரும் சொல்லிலும் செயலிலும் நேர்மை யோடும் உண்மையோடும் வாழ அழைக்கப்படுகின்றனர். உண்மையைத் தேடவும், அதைக் கடைப்பிடிக்கவும் அது வலியுறுத்துவதற்கேற்ப வாழ்வை நெறிப்படுத்தவும் கடமைப் பட்டிருக்கின்றனர். கடவுளின் முழு உண்மையும் இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவரே ''உண்மை''. அவரைப் பின்பற்றுபவர் உண்மையின் ஆவியான வரில் வாழ்ந்து இரட்டை வேடம், பாசாங்கு, வெளிவேடம் ஆகியவற்றில் இருந்து தம்மைக் காத்து கொள்கின்றார்.

(க.தி.ம 2464)

மனச்சான்று இறைவனின் குரலாகும். எப்போதும் அதற்கு செவிமடுத்து வாழ்வோம்

உண்மை நிறைந்த ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்ப எம்மால் பலவற்றை செய்ய முடியும்.



## செயற்பாடு

குடும்பம், பாடசாலை, பங்கு மற்றும் சமூகத்தை உண்மைக்கு மதிப்பளிக்கும் சமூகமாக கட்டியெழுப்ப உம்மால் செய்யக் கூடிய வற்றை பெற்றோருடன் கலந்தாலோசித்து பின்வருவனவற்றை நிரப்புக.

| வீட்டில் செய் யக் கூடியவை | பாடசாலையில் செய்யக் கூடியவை | பங்கில் செய்யக் கூடியவை | சமூகத்தில் செய்யக் கூடி யவை |
|---|---|---|---|
| 1. ................ <br> 2. ................ <br> 3. ............... <br> 4. .............. <br> 5. .............. | 1. ............... <br> 2. .............. <br> 3. .............. <br> 4. .............. <br> 5. ............. | 1. ............... <br> 2. .............. <br> 3. .............. <br> 4. .............. <br> 5. .............. | 1. ............... <br> 2. ................ <br> 3. ............... <br> 4. .............. <br> 5. .............. |



**வாழ்க்கைக்கு...**

G¨÷£õx® E s ø© ÷£_÷Áõ®.

AuØ÷PØ£ Áõ Ì ÷Áõ®.